நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி.

**முன்னிலை:- திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மன்னார்குடி.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் நாள் திங்கட்கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 09-ம் நாள்.

**CNR No.TNTV07- 001016-2026**

in

**சுருக்க விசாரணை வழக்கு எண்.** 239/2026

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 12.03.2026

வழக்கு விசாரணை முடிவுற்ற நாள்: 18.03.2026

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

கோட்டூர் காவல் நிலையம்,

குற்ற எண். 43/2026

சட்டப்பிரிவுகள். 296(b), 131 BNS ...குற்றமுறையீட்டாளர்.

/எதிர்/

புவனேஸ்வரி, வயது.36/26,

க/பெ. கோபி,

காமாட்சியம்மன் கீழத் தெரு,

மூன்றாம் சேத்தி, மன்னார்குடி. ... எதிரி

| Sl. No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused | Station Bail |
| 2. | The Date of filing of Complaint / Final Report in the Court | 12.03.2026 |
| 3. | The Date of Questioning of Accused under sections 240, 246 and 251 Cr.P.C., | 13.03.2026 |
| 4. | Miscellaneous petition and thier results including the results on challenge before superior court. Except routine petitioners like petition under sec 317 of the code. | N.A. |

| | | |
|---|---|---|
| 5. | Date of Examination in chief and cross | PW / Chief / Cross<br>1 / 16.03.2026 / 16.03.2026<br>2 / 17.03.2026 / 17.03.2026 |
| 6. | Date of Examination of the Accused under section 313 Cr.P.C., | 18.03.2026 |
| 7. | Details of Abscondence of an accused and his appearance/ production, as the case may be | N.A. |
| 8. | Grant of stay by Superior Courts | N.A. |

இவ்வழக்கு என் முன்பாக 18.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. செ.சூர்யபிரசாத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று (23.03.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கானது காவல் உதவி ஆய்வாளர், கோட்டூர் காவல் நிலைய குற்ற எண். 43/2026-ன் கீழ் எதிரி மீது பிரிவுகள் 296(b), 131 BNS-ன் கீழான குற்றம் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

இவ்வழக்கின் வாதியான கோமதி, க/பெ. தர்மராஜ் என்பவரின் கணவர் கடந்த 11 வருடங்களுக்கு முன்பு சாலை விபத்தில் இறந்து விட்டதாகவும், அதிலிருந்து வாதியானவர் தன் குடும்பத்தை கவனித்து வருவதாகவும், வாதியின் கணவர் சாலை விபத்தில் இறந்ததால் நீடாமங்கலம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து மன்னார்குடி நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவதாகவும், இது சம்மந்தமாக வாதியின் கொழுந்தனார் கோபி என்பவர் போன் செய்து விசாரித்ததாகவும், அதை தெரிந்து கொண்ட இவ்வழக்கின் எதிரி புவனேஸ்வரி வாதியின் வீட்டிற்கு சென்று வாதியை தகாத வார்த்தையால் திட்டி தலைமுடியை பிடித்து இழுத்து கையால் அடித்து குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது பிரிவுகள் 296(b), 131 BNS ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று கோட்டூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207-ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. இவ்வழக்கின் இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு எதிரி குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதிய ஆதாரம் இருக்கிறது என்பதால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 131 BNS-ன் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை எதிரிக்கு படித்துக் காட்டி விளக்கப்பட்ட போது எதிரி தன் மீது சாட்டப்பட்ட குற்றத்தை தான் செய்யவில்லை என்று மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரினார். எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. எதிரி கோரியவாறு வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், புகார் கொடுத்த நபர் பட்டியல் சாட்சி1, இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வநாயகம் ஆகியோர் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளனர்.

6. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு</u>** -

i) அ.சா.1ன் கணவர் தர்மராஜ் என்பவர் விபத்தில் இறந்துவிட்டதால் அவரது வழக்கு மன்னார்குடி நீதிமன்றத்தில் நடந்து வருகின்ற நிலையில் அது சம்மந்தமாக அ.சா.1ன் கொழுந்தனார் பிப்ரவரி மாதம் இந்த வருடம் அ.சா.1னிடம் அவரது கணவர் வழக்கு சம்மந்தமாக போனில் விசாரித்துக் கொண்டிருந்ததை தவறாக புரிந்துக்கொண்ட எதிரி அ.சா.1ன் வீட்டிற்கு

வந்து அவரிடம் கோபமாக பேசியுள்ளதை அ.சா.1 மறுநாள் காவல் நிலையம் சென்று அவரிடம் எதிரி கோபமாக பேசியதால் அவரை கண்டித்து விடுமாறு வாய்மொழியாக போலிசாரிடம் சொன்னதாகக் கூறி சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலமாக புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) கடந்த 26.02.2026- தேதியன்று கோட்டூர் காவல் நிலையத்தில் அ.சா.2 நிலைய பொறுப்பிலிருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா-ஆ.3 புகார் மனுவினை பெற்று மனு எண்.108/2026 ஆக மனு பதிவு செய்யப்பட்டு, மனு விசாரணைக்கு பின் கடந்த 27.02.2026 ம் தேதியன்று காவல் நிலைய குற்ற எண்.43/2026 ல் பிரிவுகள் 296(b), 131 BNS ன் கீழ் எதிரியின் மீது அ.சா.ஆ-3 முதல் தகவல் அறிக்கையின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றையதினமே மதியம் சுமார் 13.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வித்யா மற்றும் ராகினிஸ்வரி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ-5 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ-6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் .

iii) பின்னர் சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரியை தேடிவந்த நிலையில் ரெட்டைபுளி பஸ் ஸ்டாப் அருகில் நின்றுக்கொண்டிருந்தவரை அன்றையதினமே 13.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். இத்துடன் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது பிரிவுகள் பிரிவுகள் 296(b), 131 BNS கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 27.02.2026-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகக் கூறி அ.சா.2 காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வநாயகம் அவர்கள் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு கேட்கப்பட்டது.

9. <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-

அரசு தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை

நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எதிரி தான் குற்ற செயலில் ஈடுபட்டு அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, தலைமுடியை பிடித்து கீழே இழுத்து கையால் அடித்து குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதை நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாகக் கூறி எனவே எதிரிக்கு தண்டனை வழங்குமாறும் எடுத்துரைத்தார்.

10. **<u>எதிரி தரப்பு வாதம் பின்வருமாறு</u>** :-

எதிரி தரப்பு வாதத்தின் போது இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 பிறழ் சாட்சியாகியுள்ளார். அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட ஆவணங்களும் சாட்சிகளின் சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எதிரி தன் மீதுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை தனக்கு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**11. <u>இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:-**

எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 131 BNS-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

**12. <u>தீர்வு</u> :-**

புகார் கொடுத்த நபரான அ.சா.1, புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி தான் குற்ற செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி என்று நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

13) **புகார் கொடுத்த நபரான அ. சா. 1 தனது சாட்சியத்தில்** " எனது கணவர் தர்மராஜ் என்பவர் விபத்தில் இறந்துவிட்டார். அவரது வழக்கு மன்னார்குடி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அதுசம்மந்தமாக எனது கொழுந்தனார் பிப்ரவரி மாதம் இந்த வருடம் கடைசியில் தேதி ஞாபகமில்லை. **என்னிடம் என் கணவர் வழக்கு சம்மந்தமாக போனில் விசாரித்துக்கொண்டிருந்தார். அதை தவறாக புரிந்துக்கொண்ட ஆஜர் எதிரி என் வீட்டிற்கு வந்து என்னிடம் கோபமாக பேசினார்.** நான் மறுநாள் காவல் நிலையம் சென்று என்னிடம் ஆஜர் எதிரி

கோபமாக பேசியதால் அவரை கண்டித்து விடுமாறு வாய்மொழியாக போலிசாரிடம் சொன்னேன். போலிசார் என்னிடம் வெற்று தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளார்கள் என்று தெரியாது. " என்று கூறி சாட்சியம் அளித்து இந்திய சாட்சியை சட்டம் 154 பிரிவின் கீழ் பிறழ் சாட்சியாகியுள்ளார்.

14) இவ்வழக்கின் எதிரி தான் சம்பவத்தின் போது அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, தலைமுடியை பிடித்து கீழே தள்ளி கையால் குத்தி குற்றச்செயலில் ஈடுபட்டதாகவோ அரசு தரப்பில் சாட்சிகள் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் புகார்தாரரான அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் அளிக்காமல் பிறழ் சாட்சியமாகியுள்ளார்.

15) அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 பிறழ் சாட்சியாகியிருந்ததால், அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அவர்களின் சாட்சியம் அமையவில்லை. இந்த சூழ்நிலையில் மற்ற சாட்சிகளையும் விசாரிக்க வேண்டாமென்று குற்றத்துறை உதவி அரசு வழக்கறிஞர் அவர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டு, புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு. செல்வநாயகம் அவர்கள் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

16) புகார்தாரரான அசா.1 மற்றும் எதிரி ஆகியோர் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டதாகக் கூறி இந்நீதிமன்றத்தில் சமரச மனு 16.03.2026 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு அம்மனு M.P.No.1/26 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு சமரசம் செய்ய இயலாத வழக்கு என்பதால் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

17) புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்த அ.சா.2 ன் சாட்சியத்தின் மூலம் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருந்தாலும், அவரது சாட்சியத்தின் மூலம் வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட நிகழ்வுகளை ஊர்ஜிதம் செய்ய இயலுமே தவிர, வழக்கு சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் அவருடைய சாட்சியம் அமையவில்லை. எனவே அ.சா.2 ன் சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரியை தண்டிக்க முற்படுவது இயற்கை நீதிக்கு முரண்பட்டதாகும். எனவே அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18)அரசுத்தரப்பு சாட்சியான அ.சா.1 அரசுதரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ நாளில் அ.சா.1யை தகாத வார்த்தைகளால் திட்டி, தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கையால் குத்தி குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதை சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களினால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 131 BNS-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இறுதியாக</u>**

1) இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 131 BNS- ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து மேற்படி எதிரியை இவ்வழக்கில் இருந்து கு.வி.மு.ச. பிரிவு 278(1) -ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

2) எதிரி கொடுத்த பிணை முறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

3)இந்த வழக்கில் கைப்பற்றபட்ட வழக்கு சொத்து நீதிமன்றத்தில் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை என்பதால் சொத்து பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

4) வழக்கின் தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு கு.வி.மு.ச. 1973 பிரிவு 357, 357(A) ன்கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

| Particulars Under Rule 106 of Criminal Rules of Practice-2019 | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Description of the accused | | | | | | | Date of | | | | | | | | |
| Sl.No. | Name of the Police Station and Cr. No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurance | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence of Order | Service Copy of Judgment an accused | Explanation of Delay |
| 1. | Kottur 43/2026 | Bhuvaneswari | Gobi | Coolie | Kamachiyamman Moonram Sethi | 36/26 | 25.02.20265 | 27.02.2026 | Station bail | Not Applicable | 16.03.2026 | 18.03.2026 | Accquitted | 23.03.2026 | No Delay |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர்எண்.2,
மன்னார்குடி.

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | கோமதி | புகார்தாரர் (பிறழ்சாட்சி) |
| அ.சா.2 | திரு. செல்வநாயகம் | புலன்விசாரணை அதிகாரி |

**2. அரசு தரப்பு சான்றவாணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.02.2026 | புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 16.03.2026 | சமரச மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | 26.02.2026 | புகார் மனு |
| அ.சா.ஆ. 4 | 27.02.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 5 | 27.02.2026 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 27.02.2026 | மாதிரி வரைபடம் |

3. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

4. அரசு தரப்பு சான்று பொருள்: இல்லை.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர்எண்.2,
மன்னார்குடி.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

**குறிப்பு.**

1 இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2 இவ்வழக்கின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

3 இவ்வழக்கு விசாரணையின் போது சாட்சிகள் மூன்று வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

4 கு.வி.மு.ச. 363(5) ஆவது பிரிவின்படி மனனார்குடி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

**நகல் :-**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.